DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.250/2023**

**prosecution witness: PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1 to A5, A7 absent. Petition filed and allowed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மீனா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>12.11.2024</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் குஞ்சார்வலசையில் குடியிருந்து வருகிறேன். நண்டு கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 18.04.2019 ம் தேதி இரவு 07.00 மணிக்கு நான் எனது வீட்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது மாரியம்மாள், கீதா ஆகியோர் அத்துமீறி எங்கள் வீட்டிற்கு நுழைந்தார்கள். அப்போது எனது மகளை என்னடி நீ பேசுன என்று கேட்டு என்னை பிடித்து தலைமுடியை இழுத்து போட்டு ஏண்டி ஏணிக்கு ஓட்டு போட்ட என்று கையை முறுக்கினார்கள் எலும்பு உடைந்துவிட்டது. அதன்பின்பு மாரியம்மாள் அவரது அண்ணன் மகன் கனகராஜ், நாகராஜ், மாரியம்மாள் மகன் இளையராஜா, அவரது மருமகள் பானு, மாரியம்மாளின் கணவர் கருப்பையா ஆகியோர் எல்லாரும் வந்து என்னை கம்பை வைத்து தாக்கினார்கள். அதை தடுக்க வந்த எனது தம்பியை கனகராஜ், நாகராஜ், இளையராஜா, பானு, கீதா, மாரியம்மாள் ஆகியோர்கள் கழுத்தை நெறித்து திருப்பி விட்டார்கள். அப்போது தடுக்க வந்த எனது அம்மாவையும் கீழே தள்ளி கழுத்தில் கிடந்த ஆறே முக்கால் பவுன் செயினை அறுத்து எடுத்துவிட்டு போய்விட்டார்கள். அதன்பின்பு கையில் வைத்திருந்த கம்பை வைத்து இன்னைக்கு தப்பித்து விட்டீர்கள் கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தார்கள். நான் மயக்கமாகிவிட்டதால் எனது அம்மா என்னை ஆட்டோவில் இராமநாதபுரத்தில் உள்ள NH ஆர்த்தோ மருத்துவமனையில் சேர்த்தார்கள். அதன்பின்பு 20.04.2019 ம் தேதி மண்டபம் போலீசார் வந்து வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கினார்கள்.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு முன்பு என்மீதும், எனது தாயார், எனது தம்பி, தந்தை மீது மாரியம்மாள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பெயரில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து மண்டபம் காவல்நிலையத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் அரை மணிநேரத்தில் சென்றுவிடலாம். மண்டபம் காவல்நிலையத்திற்கு அருகில் தான் GH உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு பின்பு மண்டபம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். மண்டபம் அரசு மருத்துவமனையில் எனக்கு சிகிச்சையளித்தார்கள் என்றால் சரிதான். மண்டபம் அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றது யார் என்றால் எனது தாயார் ஆவார். சம்பவம் நடந்த உடன் நான் மண்டபம் காவல்நிலையம் சென்று தகவல் தெரிவித்துவிட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் மண்டபம் காவல்நிலையத்திற்கு செல்லும்போது மணி என்ன இருக்கும் என்றால் சுமார் 7.30 மணி இருக்கும். எங்களது வீடானது தார்சு வீடு ஆகும். அந்த தார்சு வீட்டிற்கு முன்பக்கத்தில் திண்ணை உள்ளது என்றால் சரிதான். அந்த திண்ணைக்கு முன்புறமுள்ள இடம் மணல்பகுதி பொதுஇடம் என்றால் சரிதான். அந்த மணல் பகுதி வழியாகத்தான் யாராக இருந்தாலும் எனது வீட்டிற்கு வரவும், போகவும் முடியும் என்றால் சரிதான். மணல் பகுதியில் அரசால் அமைக்கப்பட்ட மின் கம்பம் உள்ளதா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு முன்புள்ள மணல் பகுதியானது பொதுவான இடம் என்றால் சரிதான். நான் எனது வீட்டின் திண்ணையில் இருக்கும்போது எதிரிகள் அனைவரும் வந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் வந்தது எனக்கு தெரியாது. சண்டை போட்ட சத்தம் கேட்டு தான் எனது அம்மாவும், தம்பியும் வந்தார்கள் என்றால் சரிதான். குஞ்சார்வலசையில் இருந்து போகும் வழியில் தான் உச்சிப்புளி உள்ளது அதன்பின்பு தான் இராமநாதபுரம் உள்ளது என்றால் சரிதான். உச்சிப்புளியிலும், இராமநாதபுரத்திலும் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். என்னை போலீசார் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். எனது தம்பிக்கு ஏற்கனவே விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விபத்தில் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக NH ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு சென்றாரா என்றால் இல்லை. அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்தால் நான் சொல்வது பொய் என்று தெரியவரும் என்றால் சரியல்ல. எனது அம்மாவின் ஆறே முக்கால் பவுன் செயின் காணாமல் போனது பற்றி மனு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. அந்த நகையை போலீசார் கண்டுபிடித்து ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் எத்தனை பக்கம் எழுதினார்கள் என்றால் இரண்டு பக்கம் எழுதினார்கள். அந்த புகாரில் நான் முதல்விசாரணையில் சொன்னததைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். வேறு எதுவும் மாற்றம் இல்லை என்றால் சரிதான்.

எனது தம்பி பைக் ஓட்டுவார் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் ஏற்கனவே எங்களிடம் பிரச்சனை செய்ததாக புகார் மனு கொடுத்துள்ளோனா என்றால் இல்லை. எதிரிகள் உள்ளாட்சி தேர்தலில் எதுவும்

நின்றார்களா என்றால் இல்லை. அவர்கள் மண்டபத்தில் உள்ள கட்சிகளில் பொறுப்பில் உள்ளார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே வீடுகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. சம்பவம் நடந்தபோது அருகில் உள்ளவர்கள் எல்லாம் வந்து வேடிக்கை பார்த்தார்கள் தடுக்கவில்லை. இந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன்.

நானும், எதிரி பானுவின் மகள் நண்டுகம்பெனியில் வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான். ஏற்கனவே எதிரிகளின் வீட்டிற்கும், ராஜ்குமார் வீட்டிற்கு சண்டை நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராஜ்குமார், மாரிமுதது என்பவர் வீடு எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சிறிது தூரம் தள்ளியுள்ளது. ராஜ்குமாருக்கும், எதிரிகளின் வீட்டிற்கு வாக்குவாதம் ஏற்படும்போது எங்கள் வீட்டில் நின்று அவருககு ஆதரவாக பேசினேன் என்றால் இல்லை. ராஜ்குமார் பானுவை திட்டியதாக ஏற்கனவே புகார் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராஜ்குமார், பானுவை பேசியது சம்பந்தமாக நண்டு கம்பெனியில் பேசிக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியும். அந்த பேச்சில் நானும், பானுவை கிண்டல் கேலி செய்து பேசினேன் என்றால் சரியல்ல. அதை கேட்டுவிடுவார்கள் என்பதால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது தம்பி சஞ்சயும் இருசக்கர வாகனத்தில் போகும்போது ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி இந்த எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது எங்கள் வீட்டின் முன்புள்ள விறகு எந்த பக்கம் இருந்தது என்றால் வெளிப்பக்கம் சமையல் அறையில் இருந்தது. எதிரிகள் சம்பவத்தின் போது அடித்ததாக சொல்லப்படும் விறகுகட்டைகளை போலீசாரிடம் ஒப்படைத்துவிட்டோமா என்றால் நாங்கள் மருத்துவமனையில் இருந்து வந்த பின்பு போலீசார் வந்து எங்களை விசாரிக்கும்போது ஒப்படைத்தோம்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.12 18:34:46 +0530

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.250/2023**

**prosecution witness: PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1 to A5, A7 absent. Petition filed and allowed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சஞ்சய் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>12.11.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் குஞ்சார்வலசையில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 18.07.2019 ம் தேதி இரவு 07.00 மணியளவில் 1, 2 எதிரிகள் எனது வீட்டிற்கு அத்துமீறி நுழைந்து என் அக்கா மீனாவின் தலைமுடியை பிடித்து இழுத்து என் மகளை என்னடி சொன்ன என்று பொது இடத்தில் இழுத்து போட்டார்கள். பின்னர் 1, 2 எதிரிகள் என் அக்காவின் இடது கையை பிடித்து திருக்கியதில் கை உடைந்து விட்டது. ஏணி சின்னத்திற்கு ஓட்டு போட்ட கை உடைந்ததா என்று கூறி என் அக்காவின் கையை உடைத்தார்கள். அதன்பின்னர் கனகராஜ், நாகராஜ், இளையராஜா, கருப்பையா, பானு ஆகியோர்கள் எங்கள் வீட்டு திண்ணைக்கு வெளியில் உருட்டுக்கட்டையால் என் அக்காவை அடித்தார்கள். தடுக்க போன என்னை கனகராஜ், நாகராஜ், இளையராஜா ஆகியோர் என்னை கழுத்தைபிடித்து தூக்கி கம்பால் அடித்தார்கள். கருப்பையா கையால் அடித்தார். இதை தடுக்க வந்த என் அம்மாவை கீழே பிடித்து தள்ளிவிட்டார்கள். இந்த சண்டையில் 2 ம் எதிரி கீதா என் அம்மாவின் ஆறே முக்கால் பவுன் தங்க செயினை திருடி சென்றுவிட்டார். நாகராஜ், கனகராஜ், இளையராஜா, மாரியம்மாள் ஆகியோர் கட்டையை தூக்கி இப்போது தப்பித்துவிட்டீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தார்கள். அதனால் எனக்கு உயிர்பயம் ஏற்பட்டது. அதன்பின்பு என் அக்காவை சிகிச்சைக்காக இராமநாதபுரம் NH ஆர்த்தோகேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். எனக்கும் கழுத்தில்

காயம் ஏற்பட்டது. நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது மண்டபம் காவல்நிலையத்தில் போலீசார் வந்து என் அக்காவை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவம் நடந்ததாக சொல்வதற்கு முன்பு மாரியம்மாள் என் மீது புகார் கொடுக்கப்பட்டு FIR பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது அக்காவிற்கு அடிபட்டவுடன் மண்டபம் அரசு மருத்துவமனை சென்று விட்டு நேராக ஆட்டோவில் NH ஆர்த்தோ கேர் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். மண்டபம் அரசு மருத்துவமனைக்கு வந்து போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை 20 ம்தேதி வாக்குமூலம் வாங்குவதற்கு NH மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்து போலீசார் வந்து விசாரித்து கம்பை ஒப்படைத்தோம் என்றால் இல்லை. நான் தற்போது முதல்விசாரணையில் சொன்னததைத்தான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக எனது அம்மாவை விசாரித்து போலீசார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கவில்லை விசாரித்தார்கள். சம்பவம் நடநத்தாக சொல்லப்படும போது எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ளவர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். மாரிமுத்து, ராஜ்குமார் ஆகியோர் வீடு எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் பக்கத்து தெருவில் உள்ளது. மாரிமுத்து, ராஜ்குமாருடன் எதிரிகளுக்கு ஏற்கனவே பிரச்சனை இருந்தது என்றால் தெரியாது. மாரிமுத்து, ராஜ்குமாருடன் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக எனது அக்கா பானுவுடன் பேச்சுவார்த்தை செய்தார் என்றால் இல்லை. எனக்கு ஏற்கனவே விபத்து ஏறபட்டு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அது சம்பந்தமாக நான சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக நரம்பியல் மருத்துவமனைக்கும் சென்றுவந்தேன் என்றால் சரிதான். எனது அம்மாவின் ஆறே முக்கால் பவுனை செயினை போலீசார் கண்டுபிடித்து கொடுத்தார்களா என்றால் இல்லை. ஆறே முக்கால் பவுனை கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடந்தபோது ஊர்த்தலைவர்கள் வந்தார்களா என்றால் இல்லை. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியும். இருசக்கர வாகனத்தில் நானும், எனது அக்காவும் சென்று கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது அக்கா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.12 18:34:54 +0530

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.250/2023**

**prosecution witness: PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1 to A5, A7 absent. Petition filed and allowed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பசுபதி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>12.11.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் குஞ்சார்வலசையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 2019ம் வருடம் இரவு 07.00 மணிக்கு நான் என் வீட்டில் என் மகளுடன் இருந்தபோது 1, 2 எதிரிகள் வீட்டிற்கு வந்து என் மகளின் தலைமுடியை பிடித்து இழுத்து வாசலுக்கு வெளியே இழுத்து போட்டார்கள். நான் வேகமாக ஓடி போய் என் மகளை பிடித்து விட்டேன். எதிரிகள் இருவரும் என் மகளின் வலது கையின் மணிக்கட்டை உடைத்து விட்டார்கள். அதன்பின்பு கனகராஜ், நாகராஜ், இளையராஜா, பானு, கருப்பையா ஆகியோர் எங்கள் வீட்டில் இருந்த விறகு கட்டைகளை எடுத்து அடித்தார்கள். என் மகனின் கழுத்தை பிடித்து கனகராஜ், நாகராஜ், இளையராஜா ஆகியோர் பிடித்து தூக்கினார்கள். 2ம்எதிரி கீதா என் தலைமுடியை பிடித்து இழுத்து என் கழுத்தில் கிடந்த ஆறே முக்கால் பவுன் தங்க செயினை கழற்றி எடுதது போய்விட்டார். எதிரிகள் கட்டையை எடுத்து காண்பித்து உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தார்கள். அதன்பின்பு ஆட்டோவிற்கு போன் செய்து நான் என் மகள், என் மகனை அழைத்து கொண்டு மண்டபம் ஆரம்பசுகாதார நிலையம் சென்று முதல் சிகிச்சை எடுத்துககொண்டு பிறகு இராமநாதபுரத்தில் மருத்துவர் பைரோஸ்கானின் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் மகன், மகள் சிகிச்சையில் இருக்கும்போது மறுநாள் மண்டபம் காவல்நிலையத்தில் போலீசார் வந்து என் மகளிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

சம்பவம் நடந்த அன்று போலீசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு மாரிமுத்து, ராஜ்குமார் ஆகியோருக்கும் எதிரிகளுக்கும் சண்டை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்து, ராஜ்குமார் வீடு எனது வீட்டில் இருந்து நாலு வீடு தள்ளி உள்ளது. சஞ்சய், மீனாளும் எவ்வளவுநாள் மருத்துவமனையில் இருந்தார்கள் ஒன்பது நாட்கள் இருந்தார்கள். சஞ்சய்க்கு ஏற்கனவே விபத்து ஏற்பட்டு தலையில் அடிபட்டது என்றால் சரிதான். எதிரி கனகராஜ் தேர்தலில் நின்றாரா என்றால் இல்லை. சம்பவம் மணல் பகுதியில் நடந்தது என்றால் மணல் பகுதிக்கு இழுத்து வந்துவிட்டார்கள். அந்த மணல் பகுதியானது எல்லாரும் நடந்து செல்லக்கூடியது பொதுவானது என்றால் ரோடு போட்டுவிட்டார்கள். அந்தரோட்டு பகுதியானது இருட்டு பகுதி என்றால் நாலு பேரும் சேர்ந்து கனகராஜ் வீட்டிற்கு முன்பு கொண்டு வந்து விட்டார்கள். கரண்டு போய் விட்டது. சண்டை நடந்த போது அருகில் இருந்தவர்கள் எல்லாம் வேடிக்கை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள் யாரும் வந்து விலக்க வரவில்லை.

சம்பவம் நடந்த பின்பு மண்டபம் மருத்துவமனையில் முதல் சிகிச்சை எடுத்துவிட்டுதான் இராமநாதபுரம் மருத்துவமனை சென்றோம் என்றால் சரிதான். சஞ்சய்க்கு வாகனம் ஓட்ட தெரியுமா என்றால் தெரியாது. சஞ்சயும், மீனாளும் இருசக்கர வாகனத்தில் போகும்போது ஏற்பட்ட காயத்தை வைத்து தான் எதிரிகள்மீது புகார் கொடுத்துளளோம் என்றால் சரியல்ல. மாரியம்மாள் எங்கள் மீது புகார் கொடுதது வழககு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரியம்மாள் எங்கு புகார் கொடுத்தார் என்றால் மண்டபம் காவல்நிலையத்தில் கொடுத்தார். சிகிச்சைக்கு போய்விட்டு வந்தபின்பு போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள் வீட்டிற்கு வந்தார்கள். சம்பவத்தின் போது எதிரிகள் அடித்த கம்பை போலீசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் நான் பார்க்கவில்லை போலீசார் பார்த்துவிட்டு சென்றார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும, மாரியம்மாள் புகார் கொடுத்ததற்கு பயந்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது எனது மற்றொரு மகன் ராஜா இருந்தார். சம்பவம் நடந்து இரண்டு நாள் மருத்துவமனையில் மயக்க நிலையில் இருந்தாரா என்றால் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமபோது மயக்கமாக இருந்தார் மருத்துவமனை சென்றபின்பு கையை துாக்க முடியாமல் இருந்தது கட்டு போட்டார்கள்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.12 18:35:01 +0530